**ஜனவரி – 14**

# TNPSC துளிகள்

- ❖ மகேந்திர சிங் தோனி சிட்னியில் நடைபெற்ற முதல் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் ரன்கள் அடித்ததன் மூலம் ஒட்டுமொத்தமாக 10000 ரன்களைக் கடந்த 12வது வீரராகவும் 2வது முழுநேர விக்கெட் கீப்பராகவும் 5வது இந்திய மட்டை வீரராகவும் உருவெடுத்துள்ளார்.
  - சச்சின் டெண்டுல்கர், ராகுல் திராவிட், சௌரவ் கங்குலி மற்றும் விராட் கோலி ஆகியோரின் பட்டியலில் தோனி சேர்ந்துள்ளார்.

# தேசியச் செய்திகள்

## உன்னதி - யுனிஸ்பேஸ் மிகச்சிறிய செயற்கைக் கோள் சேர்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம்

- ❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் - சிறிய செயற்கைக் கோள் உருவாக்கத்தின் மீதான திறன் உருவாக்கத் திட்டமான உன்னதி (Unispace Nanosatellite Assembly & Training programme) என்ற திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- ❖ இது வெளிப்புற விண்வெளியின் அமைதியான பயன்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி மீதான ஐக்கிய நாடுகளின் முதல் மாநாட்டின் மீதான (United Nations conference on the exploration and peaceful uses of outer space - UNISPACE 50) 50வது ஆண்டு விழாவை நினைவு கூர்ந்திட ஆரம்பிக்கப்பட்டிக்கின்றது.
- ❖ உன்னதி திட்டம் மூன்று ஆண்டு காலத்திற்கு பெங்களூருவில் உள்ள யு.ஆர். ராவ் செயற்கைக் கோள் மையத்தில் மேற்கொள்ளப்படும்.
- ❖ பொறுப்பு - விண்வெளித் துறை.

## பிரயாக்ராஜ் கும்பமேளா

- ❖ ராம் நாத் கோவிந்த் தனது மனைவியுடன் பிரயாக்ராஜ்ஜில் உள்ள சங்கமத்தில் பிரார்த்தனைகளை மேற்கொண்டதன் மூலம் கும்ப மேளாவிற்கு ராஜேந்திர பிரசாத்திற்குப் பிறகு வருகை தந்த முதல் ஜனாதிபதியாக உருவெடுத்திருக்கின்றார்.
- ❖ மேலும் குடியரசுத் தலைவர் பரமார்த்த நிகேதன் முகாமில் மூன்று நாட்கள் நடைபெறும் காந்திய மறுமலர்ச்சி மாநாட்டையும் துவக்கி வைத்தார்.
- ❖ 450 ஆண்டுகளுக்குப் பிறகு சாதாரண மனிதர்களுக்காக அக்சய வத் என்ற புனித மரத்தையும், சரஸ்வதி கூப் எனப்படும் புனித கிணற்றையும் பக்தர்களுக்குத் திறந்து விட்டமைக்காக 2019-ம் ஆண்டின் பிரயாக்ராஜ் கும்பமேளா அறியப்படும்.

## குரு கோவிந்த் சிங் நாணயம்

- ❖ பிரதமர் 2019-ம் ஆண்டு ஜனவரி 13-ம் தேதி குரு கோவிந்த் சிங் உருவம் பொறித்த நினைவு நாணயத்தை வெளியிட்டார்.

- இந்நிகழ்ச்சி குரு கோவிந்த் சிங்கின் பிறந்தநாள் ஆண்டு விழாவைக் குறிக்கின்றது.
- சீக்கியர்களின் 10வது குருவான குரு கோவிந்த் சிங் தனது போதனைகள் மற்றும் கொள்கைகள் மூலமாக பலருக்கு ஒரு உத்தேவத்திற்கான ஊக்க சக்தியாக விளங்குகின்றார்.

*நினைவு நாணயங்களின் பட்டியல்*

- பிரபல இந்திய நடிகர் மற்றும் அரசியல்வாதியான மறைந்த எம்.ஜி ராமச்சந்திரனின் நினைவாக 100 ரூபாய் மற்றும் 5 ரூபாய் நாணயங்கள் வெளியிடப்பட்டன.
- கர்நாடக பாடகர் எம்.எஸ். சுப்புலட்சுமியின் நினைவாக 100 ரூபாய் மற்றும் 10 ரூபாய் நாணயங்கள் வெளியிடப்பட்டன.



## அரசு மின்னணுச் சந்தை - உமனியா

- அரசு மின்னணுச் சந்தையானது பல்வேறு அரசு அமைச்சகங்களுக்கு நேரடியாக கைவினைப் பொருட்கள், கைத்தறி, சணல் மற்றும் தேங்காய் நார் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் அலுவலக வேலைப்பாடுகள் ஆகியவற்றை பெண் தொழில்முனைவோர்கள் மற்றும் பெண் சுய உதவிக் குழுக்கள் விற்பனை செய்வதை இயலச் செய்திடும் வகையில் அரசு மின்னணுச் சந்தை மீதான பெண்கள் எனப்படும் முன் முயற்சியை வெளியிட்டு இருக்கின்றது.



- அரசு மின்னணுச் சந்தை என்பது பல்வேறு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களால் பொருட்கள் மற்றும் தேவைகளை கொள்முதல் செய்வதற்கான அமைச்சகத்தின் ஒரு இணையதள நடைமுறையாகும்.

## தேசிய நெடுஞ்சாலை 66

- பிரதமர் தேசிய நெடுஞ்சாலை 66ன் மீது அமைந்த 13 கிலோ மீட்டர் அளவிற்கு இருவழிப்பாதையான கொல்லம் புறவழிச் சாலையை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- இந்த புறவழிச்சாலை மொத்தம் 1540 மீட்டர்கள் நீளத்திற்கு அஷ்டமுடி ஏரியின் மீது மூன்று பெரிய பாலங்களைக் கொண்டதாகும்.
- கொல்லம் புறவழிச்சாலை ஆலப்புழாவிற்கும் திருவனந்தபுரத்திற்கும் இடையேயான பயண தூரத்தைக் குறைப்பதோடு கொல்லம் நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும்.



## அறிவியல் தொலைக்காட்சி

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையானது பிரசார் பாரதியின் தூர்தர்ஷனுடன் இணைந்து இரண்டு அறிவியல் தொடர்பு முயற்சிகளை மேற்கொண்டிக்கின்றது. அவையாவன
    - அறிவியல் தொலைக்காட்சி
    - இந்திய அறிவியல்

  ஆகியவையாகும்
- அறிவியல் தொலைக்காட்சி என்பது பொது ஒளிபரப்பு நிறுவனமான தூர்தர்ஷன், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி நிறுவனமான விஞ்ஞான் பிரச்சார் அகியவற்றின் கூட்டு முயற்சியாகும். இது தூர்தர்ஷனின் தேசிய அலைவரிசையில் ஒரு மணிநேரம் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சியாகும்.

- இந்திய அறிவியல் என்பது இணைய வசதி அமைக்கப் பெற்ற அனைத்து உபகரணங்களிலும் கிடைக்கப் பெறும் ஓர் இணையதள அலைவரிசை ஆகும்.

## வாக்காளர் விழிப்புணர்வு மன்றங்கள்

- புதுதில்லியில் இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் விழிப்புணர்வு மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- வாக்காளர் விழிப்புணர்வு மன்றங்கள் என்பது விவாதங்கள், வினாடி வினா, போட்டிகள் மற்றும் இதர ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் மூலமாக தேர்தல் முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற ஒரு முறைசாராத மன்றங்களாகும்.

### *தேர்தல் எழுத்தறிவு சங்கம்*

- இது இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் எழுத்தறிவு சங்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- 2018-ம் ஆண்டு ஜனவரி 25-ம் தேதி 8வது தேசிய வாக்காளர் தினத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட இது ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் தேர்தல் எழுத்தறிவு சங்கத்தை ஏற்படுத்த எண்ணுவதோடு மட்டுமல்லாமல், யாரெல்லாம் முறைசார் கல்வி அமைப்பிற்கு வெளியில் உள்ளார்களோ அவர்களுக்கு எழுத்தறிவூட்ட ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் சுனாவ் பாத்சாலா எனும் வாக்குச் சாவடிப் பாடசாலையை அமைக்கவும் எண்ணுகின்றது.

## சஞ்சி - முஜ் மெய்ன் கலாகர்

- தேசிய இசை, நடனம் மற்றும் நாடகத்திற்கான நிறுவனமான சங்கீத நாடக அகாடமி (Sangeet Natak Akademi - SNA) சஞ்சி முஜ் மெய்ன் கலாகார் என்ற இணையதள பரப்புரையின் இரண்டாவதுத் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- இது நேரடியான மக்கள் பங்களிப்பின் மூலம் தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தையும் பன்முகத் தன்மை உடைய கலாச்சார விழுமியங்களையும் ஊக்குவித்து ஆவணப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும்.

### *சங்கீத நாடக அகாடமி*

- கலாச்சார பன்முகத் தன்மையைப் பாதுகாக்கவும் நாட்டின் பல்வேறுபட்ட கலாச்சார விழுமியங்களையும் உணர்வுகளையும் பரப்பி மேம்படுத்துவதில் தொடர்புடைய விவகாரங்களான தொட்டுணர முடியாத கலாச்சார பாரம்பரியத்தையும், பல்வேறுபட்ட யுனெஸ்கோ ஒப்பந்தங்களையும் ஒருங்கிணைப்பதற்கான இந்திய அரசின் கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் ஒரு ஒப்புதல் அமைப்பே சங்கீத நாடக அகாடமி ஆகும்.

## துடிப்பான நகரம்


- JLL நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆறாவது உத்வேகமான நகரத்திற்கான பட்டியலின் படி, உலகளாவிய அளவில் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய மற்றும் வளருகின்ற 131 பொருளாதார மையங்களில் பெங்களூரு உலகின் மிக துடிப்பான நகரமாக இருக்கின்றது.




- இது ஹைதராபாத்தால் பின்தொடரப்படுகின்றது.

## கல்வியின் நிலை பற்றிய வருடாந்திர அறிக்கை


- 2018 கல்வியின் நிலை பற்றிய வருடாந்திர அறிக்கை (Annual Status of Education Report - ASER) என்பது 2006-ம் ஆண்டிலிருந்து பிராதம் என்ற அரசு சாரா அமைப்பால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு வருடாந்திர அறிக்கையாகும்.
- இவ்வறிக்கை எட்டாம் வகுப்பு மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களால் ஒரு எண் கணிதப் பிரிவுத் தீர்வினை சரியாக அறிய முடியாமலும் நான்கில் ஒரு பகுதி மாணவர்கள் ஆரம்ப நிலைக் கல்வி தரத்தில் உள்ள வாக்கியங்களை படிக்க முடியாமலும் உள்ளதாக தெரிவிக்கின்றது.
- கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் கீழ்மட்ட ஆரம்ப நிலைக் கல்வி மாணவர்களின் படிக்கும் திறன் மற்றும் கணிதத் திறன்களில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதே வேளையில் 8-ம் வகுப்பு மாணவர்களின் திறன்கள் உண்மையில் ஒரு தொய்வைக் கண்டிருக்கின்றன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## சாங்’ இ-4 ஆய்வு - பருத்தி பயிரிடுதல்

- நிலாவிற்கு சமீபத்தில் சீனாவின் சாங்’ இ-4 ஆய்வு என்ற திட்டத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்ட ஒரு பருத்தி விதை முளைவிடத் தொடங்கியிருக்கின்றது. இதுவே நிலவில் உயிரியல் தொடர்பாக வளரத் தொடங்கிய முதல் விவகாரம் ஆகும்.
- ஜனவரி 3-ம் தேதியன்று, சீனாவின் தானியங்கி விண்வெளிக் கருவியான சாங்’இ-4 ஆய்வுக் கருவி, விண்வெளி ஆய்வின் மனித வரலாற்றில் முதல் முறையாக நிலவின் மறுபக்கம் தரையிறங்கியது.
- நிலவில் மொதுவாக தரையிறக்கம் மேற்கொண்ட 1.3 டன் எடையுடைய இந்த தரையிறக்கக் கருவி நிலவில் ஒரு சிறிய உயிர்க்கோளத்தை ஏற்படுத்துவதற்காக பருத்தி விதைகள், எண்ணெய் வித்துக்கள், கடுகு, உருளைக் கிழங்கு, அரபிடோப்ஸிஸ், பட்டாம் பூச்சிகளின் முட்டைகள் மற்றும் சிறிது ஈஸ்ட் ஆகியவற்றைக் கொண்டு சென்றது.
- நிலவின் மீதான ஒரு சிறிய உயிர்க்கோள பரிசோதனைத் திட்டமென்பது ஒளிச் சேர்க்கை மற்றும் சுவாசத்தைச் சோதிக்கக் கூடிய ஒரு திட்டமாகும்.



# இதரச் செய்திகள்

## தொலைநோக்குப் பார்வை 2040 - விமானப் போக்குவரத்து

- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் தொலைநோக்குப் பார்வை 2040 என்ற ஆவணத்தை வெளியிட்டு இருக்கின்றது.
- இந்தியாவின் விமானப் போக்குவரத்து மூலம் செய்பவர்களின் ஆறு மடங்கு அளவில் 1.1 பில்லியன் என்ற அளவிற்கு வளரும் என்றும் 2040-ம் ஆண்டு வாக்கில் செயல்படக் கூடிய விமான நிலையங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 200 ஆக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்த ஆவணத்தின் படி, குறைவாக போக்குவரத்துடைய விமான நிலையங்களை அதன் ஆரம்ப நிலைகளில் மேம்படுத்த முதற்கட்டமாக 2 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற அளவிற்கு ஒரு கணிசமான தொகையுடன் 'நாப் நிர்மாண் நிதி' (Nabh Nirman Fund - NNF) என்பதை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யலாம்.

- - - - - - - - - - - - - - -